ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | தொடர்பூட்டல் திணைக்களம் |
| திகதி | 2024.01.22 |

அண்மைய பேரண்டப்பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் கீழான பொருளாதார மற்றும் நிதியியல் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதிலுள்ள முன்னேற்றம் என்பன தொடர்பில் கலந்துரையாடுவதற்கு திரு. பீற்றர் புருவர் தலைமையிலான பன்னாட்டு நாணய நிதியத்தின் பணிக்குழுவொன்று 2024 சனவரி 11 தொடக்கம் 19 வரையான காலப்பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்தது. விஜயத்தின் இறுதியில் பன்னாட்டு நாணய நிதியம் பின்வரும் ஊடக அறிக்கையினை 2024 சனவரி 19 அன்று வெளியிட்டதுடன் அதனைக் கீழுள்ள இணைப்பின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

https://www.imf.org/en/News/Articles/2024/01/18/pr2414-sri-lanka-imf-staff-concludes-visit

**பன்னாட்டு நாணய நிதியத்தின் அலுவலர்கள் இலங்கைக்கான விஜயத்தை நிறைவுசெய்துள்ளனர்**

பணிக்குழு வருகையின் பின்னரான பத்திரிகை வெளியீடானது நாடொன்றிற்கான விஜயமொன்றினைத் தொடர்ந்து பூர்வாங்கமாகக் கண்டறிந்தவைகளை தெரிவிக்கின்ற பன்னாட்டு நாணய நிதியத்தின் அலுவலர் குழுக்களின் கூற்றுக்களை உள்ளடக்கும். இக்கூற்றில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் பன்னாட்டு நாணய நிதிய அலுவலர்களின் கருத்துக்களேயன்றி அது பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையின் கருத்துக்களைப் பிரதிபலிக்க வேண்டுமென்ற அவசியமில்லை. இப்பணிக்குழு நிறைவேற்றுச் சபை கலந்துரையாடலுக்கு வழிவகுக்கமாட்டாது.

- இலங்கை அதிகாரிகளினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பொருளாதார மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டமானது 2023இன் மூன்றாவது காலாண்டில் பதிவுசெய்யப்பட்ட சாதகமான உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி, குறைவான பணவீக்கம், அதிகரிக்கப்பட்ட வருவாய் சேகரிப்பு அத்துடன் வெளிநாட்டு ஒதுக்குகளை கட்டியெழுப்புதல் என்பனவற்றுடன் மீட்சியின் முதலாவது சமிஞ்சைகளை விளைவிக்கின்றது.
- மக்களுக்கு நன்மையளிக்கின்ற முழுமையான மற்றும் நீடித்திருக்கின்ற பொருளாதார மீட்சியை உறுதிசெய்யக் கூடிய பரந்த அடிப்படையிலமைந்ததும் நிலையான வளர்ச்சியொன்றாகவும் இந்நிலைப்படுத்தலை பரிணமிக்கச்செய்வதற்கு மறுசீரமைப்பு நிகழ்ச்சிநிரலைத் தொடர்ச்சியாக முன்னெடுப்பது அவசியமாகும்.
- பன்னாட்டு நாணய நிதியத்தினால் ஆதரவளிக்கப்படும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முக்கிய கடமைப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் காணப்படுகின்ற முன்னேற்றம் இலங்கையின் பொருளாதார ஆரோக்கியத்தினைக் மதிப்பிடுகின்ற வரவிருக்கும் 2024 உறுப்புரை IV ஆலோசனையுடன் ஒன்றுசேர்த்து விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டின் இரண்டாம் மீளாய்வைப் பின்னணியாகக் கொண்டு முறையாக மதிப்பிடப்படும்.

**கொழும்பு, இலங்கை:** விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் கீழான அண்மைக்கால பேரண்டப்பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் பொருளாதார மற்றும் நிதியியல் கொள்கைகளை

நடைமுறைப்படுத்துவதிலுள்ள முன்னேற்றம் பற்றி கலந்துரையாடுவதற்கு திரு. பீற்றர் புரூவர் தலைமையிலான ப.நா.நிதியத்தின் அலுவலர் குழுவொன்று 2024 சனவரி 11 தொடக்கம் 19 வரை இலங்கைக்கு விஜயம் செய்திருந்தது. விஜயத்தின் இறுதியில் திரு. புரூவர் பின்வருமாறு அறிக்கையை வெளியிட்டார்:

“இலங்கை அதிகாரிகளால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பொருளாதார மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டமானது மீட்சியின் முதலாவது சமிஞ்சைகளை விளைவிக்கின்றது. 2023இன் மூன்றாவது காலாண்டில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி 1.6 சதவீதம் கொண்ட சாதகமான வளர்ச்சியினை பதிவுசெய்துள்ளது. இது, தொடர்ச்சியான ஆறு காலாண்டுகளில் முதலாவது விரிவடைதலாகும். அத்தியாவசிய பொருட்களின் பற்றாக்குறைகள் தளர்வடைந்துள்ளதுடன் பணவீக்கம் கட்டுப்படுத்தப்பட்டுக் காணப்படுகின்றது. 2023 காலப்பகுதியில் மொத்த பன்னாட்டு ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 2.5 பில்லியனால் அதிகரித்துள்ளதுடன் தற்காலிக தரவுகள் 2023இன் நான்காவது காலாண்டுக் காலப்பகுதியில் அதிகரித்த அரசிறை வருவாய் சேகரிப்புக்களை சுட்டிக்காட்டுகின்றன. இருப்பினும், இம்மேம்பாடுகள் இலங்கை மக்களுக்கான மேம்பட்ட வாழ்க்கை நிலைமைகளாக மாற்றப்படுவதற்கான தேவை காணப்படுவதனால் சவால்கள் தொடர்ந்தும் காணப்படுகின்றன.

“இதன் பின்னணியில், மறுசீரமைப்பு உத்வேகத்தினை தொடர்ந்து பேணுவதும் நிகழ்ச்சித்திட்ட கடமைப் பொறுப்புக்களை உரியகாலத்தில் நடைமுறைப்படுத்துவதை உறுதிசெய்வதும், நம்பிக்கையினை மீளக்கட்டியெழுப்புவதற்கும் அனைத்து மக்களுக்கும் நன்மைபயக்கவல்ல உறுதியான தளமொன்றில் மீட்சியினை இடம்பெறச்செய்வதற்கும் இன்றியமையாதனவாக விளங்குகின்றன. முன்னேற்றகரமான ஆதன வரியின் அறிமுகத்தை நோக்கிய துரிதமான முன்னேற்றமானது சுமையினை நியாயமாகப் பகிர்ந்துகொள்வதனை உறுதிசெய்வதற்கும் அதேவேளையில் வருவாய் அடிப்படையிலமைந்த திரட்சியினை நிலைநிறுத்துவதற்கும் முக்கியமானதாகும். மறுசீரமைப்புக்களை மேலும் நிலைபெறத்தக்கவையாக ஆக்குவதற்கும் படுகடன் நிலைபெறுதன்மையினை மீட்டெடுப்பதற்கான இலங்கையின் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்கு கடன்கொடுநர்கள் மத்தியில் நம்பகத்தன்மையினை மேலும் கட்டியெழுப்புவதற்கும் வரி நிர்வாகத்தை வலுப்படுத்தல், வரி விலக்களிப்புக்களை அகற்றுதல் மற்றும் வரி ஏய்ப்புக்களை முனைப்பாக இல்லாதொழித்தல் என்பனவற்றை வரிக்கொள்கை வழிமுறைகளுடன் ஒன்றிணைக்கவேண்டிய தேவை காணப்படுகின்றது.

“பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் இலங்கை மத்திய வங்கியின் வெற்றியினைக் கட்டியெழுப்புவதற்கு, எதிர்கால நாணயக் கொள்கைத் தீர்மானங்கள் பணவீக்க எதிர்பார்ப்புக்களை நன்கு நிலைநிறுத்தப்பட்டதாக பேணுவதனை நோக்காகக் கொண்டு முன்மதிமிக்கதாகக் காணப்படவேண்டும். தொடர்ச்சியான நிச்சயமின்மைக்கு எதிராக, வலுவான ஒதுக்குத் திரட்டுதல் ஊடாக வெளிநாட்டு தாங்கிருப்புகளை தொடர்ந்தும் கட்டியெழுப்புவது முக்கியமானதாக விளங்குகின்றது. மேம்பட்ட இலக்கிடல் மற்றும் சிறந்த பண மாற்றல்களின் உள்ளடக்கம் என்பனவூடாக வறுமையானவர்களையும் பாதிக்கப்படக்கூடியவர்களையும் பாதுகாத்தல் முக்கியமானதாகக் காணப்படுகின்றது.

“நிதியியல் துறையின் உறுதிப்பாட்டினை பாதுகாப்பதற்கும் பொருளாதார வளர்ச்சிக்கான அதன் இயலளவை கட்டியெழுப்புவதற்கும் நிதி ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தமது கடமைப் பொறுப்புக்களுக்கிசைவாக வங்கித்தொழில் சட்டத்திற்கான திருத்தங்களை அதிகாரிகள் உடனடியாக

இறுதிப்படுத்தி, வங்கி மீள்மூலதனமாக்கல் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் மற்றும் நிதியியல் மேற்பார்வை மற்றும் நெருக்கடி முகாமைத்துவக் கட்டமைப்பினை வலுப்படுத்தவும் வேண்டும்.

“ப.நா.நிதியத்தின் ஆளுகை ஆய்வறிக்கை வெளியீட்டினைத் தொடர்ந்து, விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டின் கீழ் முன்னுரிமை கடமைப்பெறுப்புக்களுக்கப்பால் அறிக்கையில் உள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு தமது சொந்த நடவடிக்கைத் திட்டமொன்றினை பின்பற்றுவது அதிகாரிகளுக்கு தற்போது மிக முக்கியமாகக் காணப்படுகின்றது. அதேநேரத்தில், பொதுமக்கள் நம்பிக்கையினை வலிமைப்படுத்தவும் இம்முக்கிய முயற்சிகளின் நடைமுறைப்படுத்தலை வசதிப்படுத்துவதற்கும் ஆளுகை மற்றும் வெளிப்படைத்தன்மை மறுசீரமைப்புக்களை இயலச்செய்கின்ற சூழலொன்றை உறுதிசெய்தல் முக்கியமானதாகும்.

“படுகடனை நிலைபெறத்தக்க பாதையில் இடம்பெறச்செய்வதுடன்கூடிய முன்னேற்றத்தை அதிகாரிகள் பாராட்டத்தக்க வகையில் மேற்கொண்டுள்ளனர். உள்நாட்டு படுகடன் மறுசீரமைப்பினை நிறைவேற்றியமை மிக முக்கிய மைல்கல்லொன்றாக அமைந்தது. அலுவல்சார் கடன்கொடுநர்களுடன் இறுதிக்கட்ட இணக்கப்பாடுகளை துரிதமாக நிறைவுசெய்வதும் வெளிநாட்டு தனியார் கடன்கொடுநர்களுடன் தீர்மானமொன்றை எட்டுவதும் இன்றியமையாததாக விளங்குகின்றன. ப.நா.நிதியத்தினால் ஆதரவளிக்கப்படும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முக்கிய கடமைப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் காணப்படுகின்ற முன்னேற்றம் இலங்கையின் பொருளாதார ஆரோக்கியத்தினைக் மதிப்பிடுகின்ற வரவிருக்கும் 2024 உறுப்புரை IV ஆலோசனையுடன் ஒன்றுசேர்த்து விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டின் இரண்டாம் மீளாய்வைப் பின்னணியாகக் கொண்டு முறையாக மதிப்பிடப்படும்.

“ப.நா.நிதியக் குழுவானது சனாதிபதியும் நிதி அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் முனைவர். பி. நந்தலால் வீரசிங்க, சபாநாயகர் திரு. மஹிந்த யாப்பா அபேவர்த்தன, அமைச்சர் திரு. கஞ்சன விஜேயசேகர, அமைச்சர் திரு. விஜயதாச ராஜபக்ஷ, இராஜாங்க அமைச்சர் திரு. செஹான் சேமசிங்க, திறைசேரிக்கான செயலாளர் திரு. கே. எம். மஹிந்த சிறிவர்த்தன, வடக்கு மாகாண ஆளுநர் திருமதி. பி. எஸ். எம். சார்ல்ஸ், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் ஏனைய மூத்த அரசாங்க மற்றும் இலங்கை மத்திய வங்கி அலுவலர்கள் ஆகியோருடன் சந்திப்புக்களை நடாத்தியது. ப.நா.நிதியக் குழுவானது பாராளுமன்ற உறுப்பினர்கள், தனியார் துறை, சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் அபிவிருத்திப் பங்காளர்கள் ஆகியோரையும் சந்தித்தது.

“விஜயத்தின் போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கான பணிக்குழுவின் விஜயம் உள்ளடங்கலாக உன்னதமான ஒத்துழைப்பினை வழங்கியமைக்காக நாம் அதிகாரிகளுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இவ்விஜயம், இலங்கைக்கான சவால்களையும் அதேபோன்று உள்ளார்ந்த வாய்ப்பினையும் பணிக்குழு புரிந்துகொள்வதை மேம்படுத்தியுள்ளது. நெருக்கடியிலிருந்து முழுமையான பொருளாதார மீட்சியொன்றுக்காக இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான எமது கடமைப்பொறுப்பினை நாம் உறுதிப்படுத்துகின்றோம்.”